REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★

# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 12உ செவ்வாய் (25—1—55) ★ ★ வெளியூர்: தை 13உ புதன் (26—1—55) [இதழ் 191

## 'சோஷலிசமோ', 'கம்யூனிசமோ நிறுவப்பட முடியாதாம்!

சென்னை, ஜன. 24—

"இந்தியாவில் தற்போது சோஷலிசமோ, கம்யூனிசமோ நிறுவப்பட முடியாது. ஏனெனில், நாட்டில் பங்கிட்டுத் தருவதற்குச் செல்வம் இல்லை," என்று இந்தியப் பிரதமர் பண்டித நேரு கூறியிருக்கிறார்.

ஆவடி மாநாட்டில் பேசிய அவர், மேலும், "சோஷலிசமோ, கம்யூனிசமோ, இருக்கிற செல்வத்தைப் பங்கிட்டுத் தர உதவலாம்; ஆனால் இங்கு ஏழ்மையைத் தவிர வேறு செல்வமில்லை," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

# பதவியைக் காக்கப் பிள்ளையாரிடம் பேரம்!

## 1,001 தேங்காய் உடைப்பதாக ம. சோ. க. கூட்டத்தில் தீர்மானம்

### பட்டம் தாணுவின் பதவிக்கு முடிவு நாள் நெருங்குகிறது!

திருவனந்தபுரம், ஜன. 25—

திருவாங்கூர்—கோச்சி சட்டசபை இன்று கூடியிருக்கிறது. ராஜப்பிரமுகர், அரசாங்கம் மேற்கோள்ள இருக்கும் நடவடிக்கைகளை விளக்கியுள்ளார். இத்துடன் இன்றைய நிகழ்ச்சி முடிவுற்றது. நாளை மீண்டும் கூட இருக்கிறது.

இக்கூட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பட்டம் தாணுவின் மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் பத்து மாத பேயாட்டத்திற்கு ஒரு முடிவு கட்டும் முக்கிய கட்டமாகும்.

சென்ற திங்களில் காங்கிரஸ் கட்சி, தனது ஆதரவை பட்டத்திற்கு இனி அளிப்பதில்லை என முடிவு கட்டிவிட்ட பிறகு, இப்பொழுதுதான் முதல்முறையாக திரு-கோச்சி சட்டசபை கூடுகிறது. அரசியல் வெறும் குழப்பமாக இருந்துவருகிறது. ராஜப்பிரமுகரின் பேச்சுக்கு நன்றி தெரிவிக்கும் நாளான 31-ந் தேதிவரை இக்குழப்பம் நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் காலத்தில் பிணங்கி இருந்த திரு-கொச்சி தமிழ்நாடு காங்கிரஸ், தமிழர்களை சுட்டுத் தள்ளிய அக்கிரமத்தின் விளைவாக, மீண்டும் காங்கிரஸ் கட்சியுடன் கள்ள நட்பு பாராட்ட முன்வந்திருக்கிறது.

திரு-கோச்சி தமிழ்நாடு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினரான சிதம்பரநாத நாடார் அவர்கள், பட்டம் அமைச்சர் குழுமீது நம்பிக்கை இல்லை என்ற ஒரு தீர்மானத்தைக் கோண்டுவர இருக்கிறார்.

பட்டத்தை, பதவியிலிருந்து கவிழ்த்துவிட்டு, அப்பதவியில் தான் அமர வேண்டுமென பதவி வெறி கோண்டிருக்கும் திரு-கோச்சி காங்கிரஸ் கட்சியின் விருப்பத்தைக் கருவறுக்க, காங்கிரஸ் கட்சிக்கு மாறுபட்ட மற்ற கட்சிகளும் வழிவகைகளைத் தேடிக் கோண்டு இருக்கின்றன. தேர்தலுக்குமுன் செய்துகோண்டு, பின்னர் ஒன்றை ஒன்று வெளிப்படையாகத் தாக்கிக் கோண்டு பிரிந்துவிட்ட, முன்னாள் உடன்படிக்கைக்கு மீண்டும் உயிர் கோடுத்து, கூடுமானவரை பட்டத்தை கவிழவிடாமல் பாதுகாத்து வரலாமா என அக்கட்சிகள் எண்ணுவதாகவும் நம்பப்படுகிறது.

எப்படியிருந்தாலும் பட்டம் மந்திரி சபை கோண்டுவர இருக்கும் முற்போக்கு திட்டங்களுக்கெல்லாம் சட்டசபையில் ஆதரவு இருந்தே தீரும்; எனவே, எதிர்கால விளைவைப் பொருட்படுத்தாமல், பதவியிலிருக்கும்படியாக, திரு-கோச்சி ம. சோ. கட்சி செயற்குழு, பட்டத்திற்கு கட்டளை பிறப்பித்திருக்கிறது.

நம்பிக்கையின்மை தீர்மானத்தைக் கோண்டுவருவதற்கான சபையின் அனுமதியைக் கோரும் தீர்மானம் ஒன்று 27-ந் தேதி சட்டசபை நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றும் இருக்கிறது. அன்றுதான், பட்டத்தின் பதவி தொலைவதும் நீடிப்பதும் நிர்ணயிக்கப்படும்.

இதற்கிடையில் பட்டத்தின் ஆதரவாளர்களான ம. சோ. கட்சியினர், பட்டத்தின் பதவியைக் காப்பாற்ற அருள் புரியுமாறு, அங்குள்ள பிள்ளையார் ஒன்றுடன் பேரம் பேசியுள்ளார்கள். கோரிக்கையில் வெற்றி கிடைத்தால் 1001 தேங்காய் சிதர்காய் விடுவதாகவும் பிள்ளையாருடன் வியாபார உடன்படிக்கை செய்துகொண்டுள்ளனர், தென் திருவாங்கூரில் உள்ள உண்ணுமலைகாடா ம. சோ. கட்சியினர்.

அங்கு நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில், இப்பிள்ளையாரை உதவிக்குக் கூப்பிடும் பேரம் ஒரு தீர்மான ரூபத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பட்டத்தின் பதவிக்கு வரவிருக்கும் விக்கினத்தை விக்னேஸ்வரர் காப்பாற்றுவாரோ அல்லது கைவிடுவாரோ யார் கண்டார்கள்?

இக்குறிப்பிடத்தகுந்த ஒரு செயலுக்காகவே, பட்டம் மந்திரிசபை மறைந்தொழிவதே வரவேற்கத்தக்கது என்றுதான் மக்கள் நலம் நாடுவோர் விழைவர்.

## மதுவிலக்கை மீறிய மாஜிஸ்திரேட்டுகள்

சூரத்தைச் சேர்ந்த லஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு போலீசார், மதுவிலக்குச் சட்டத்தின் 66 'பி' பிரிவின் கீழ் 2 மாஜிஸ்திரேட்டுகள், 2 டாக்டர்கள், ஒரு போலீஸ் பட்டேல் ஆகியோர்மீதும், மற்றும் 3 பேர் மீதும் வழக்குத் தொடர்ந்துள்ளனராம்.

சூரத்துக்கு அருகிலுள்ள கோசாட் என்ற கிராமத்தில் உள்ள ஒரு வீட்டை மேற்படி போலீசார் சோதனையிடச் சென்றபோது, மேற்கண்டவர்களனைவரும் மதுபானம் அருந்திக் கொண்டிருந்தார்களாம்!

## எச்சரிக்கையை ஏற்க மறுப்பு

"இந்தியா அல்லது கோவா தொண்டர்கள் யாராவது நாடு கடத்தப்பட்டால், அதனால் மிக மோசமான விளைவுகள் எல்லாம் நேரிடும்," என்று இம்மாதம் 11-ந் தேதி இந்திய சர்க்கார் அனுப்பிய எச்சரிக்கையை போர்ச்சுகல் நிராகரித்து விட்டதாகத் தெரிகிறது.

போர்ச்சுகல் சர்க்கார், இந்திய சர்க்காருக்கு இதுபற்றி எழுதியிருக்கின்ற பதிலொன்றில், அந்நிய சர்க்கார்களின் சொந்த விஷயங்களிலெல்லாம் இந்திய சர்க்கார் தலையிடுவது தனக்கு ஆச்சரியமளிப்பதாக இருக்கிறதென்றும், இந்திய சர்க்காருக்கு, தனது உரிமைகளின் எல்லைகள் எவை என்றே தெரியவில்லை என்ற முடிவுக்குத்தான் யாரும் வரவேண்டியதாகயிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறதாம்.

## முன்னாள் இலங்கை தூதுவர் பாக். தூதுவராகிறார்!

பாகிஸ்தானில் இந்தியாவின் தூதுவராக சி. சி. தேசாய் (ஐ. சி. எஸ். அதிகாரி) நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர்தான் முன்னாள் இலங்கை இந்தியத் தூதுவராயிருந்தவர் என்பது நினைவிலிருக்கலாம்.

## 'காங்கிரஸ் கட்சித் தேர்தல்கள் யோக்கியமாக நடைபெறுவதில்லை'

### லால்பகதூர் சாஸ்திரியின் ஒப்பம்

சென்னை, ஜன. 24—

"நமது தேர்தல் முறைகள், நட்புறவு அற்ற முறையில் இருக்கின்றன; ஒருவருக்கோருவரை நாம் இழிவுபடுத்துகிறோம்; அதனால் வாக்காளர்களைக் குழப்பி விடுகிறோம்; காங்கிரஸ் கட்சிக்கு அவப்பெயரைத் தேடித் தருகிறோம்; தேர்தலுக்குப் பின்னும்கூட காங்கிரஸ்காரர்கள் ஒருவருக்கோருவர் விரோதிகள்போலவே நடந்துகோள்கிறார்கள்; நமது தேர்தல் முறைகள் யோக்கியமானதாக இருக்கவில்லை; இது, இந்தியாவில் உள்ள காங்கிரஸ்காரர்களும் அறிந்த ஒன்றுதான்,"

—என்று, காங்கிரஸ் கட்சியில் உள்ள ஊழல்களைக் கண்டித்து, கட்சியை 'சுத்த'ப்படுத்த வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றை ஆவடி மாநாட்டில் பேசிய லால்பகதூர் சாஸ்திரி (இந்திய ரயில்வே மந்திரி) குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நாம் வைத்துக்கொண்டிருக்கிற கட்சித் தேர்தல் டிரிபியூனல்கள் கூட எனக்குப் பிடிக்கவில்லை; சில சந்தர்ப்பங்களில், காங்கிரஸ்காரர்கள், தங்கள் வழக்குகளுக்கு வக்கீல்களின் துணையைக்கூட நாடியிருக்கின்றனர்; இந்த முறை சரியா என்று நாம் பார்க்க வேண்டும்."

தீர்மானத்தை ஆதரித்து திரு. ஆர். வெங்கட்ராமன் பேசினார்.

## குடியரசு தினச் சலுகை

ஐதராபாத் மாநிலத்திற்கு வெளியே அனுப்பப்படும் எல்லா வித பொருட்களுக்கும், குடியரசு தினமாகிய ஜன. 26-ந் தேதி முதல் தரைச் சுங்கவரி ரத்து செய்யப்பட விருப்பதாக ஐதராபாத் சர்க்கார் தெரிவித்துள்ளது.

## படிப்பினை!

கல்கத்தா பல்கலைக் கழகத்திற்கு மேற்கு வங்க மாநில கவர்னர் இதுவரையிலும் ரூ. 13 லட்சம் நன்கொடை அளித்துள்ளாராம். அவர், இந்த ஆண்டில் மட்டும் ரூ. 1,60,000 நன்கொடை அளித்திருப்பதாகத் தெரிகிறது.

## ரூ. 6 லட்சம் செலவில்

### ஆவடி ரயில் நிலையங்கள்

சென்னை ஆவடியில், சத்தியமூர்த்தி நகர், பிரதிநிதிகள் முகாம் ஆகிய இரண்டு இரயில் நிலையங்களையும் கட்ட இரயில்வே நிர்வாகம், 6 லட்சம் ரூபாய் செலவிட்டதாம்!

மாநாட்டுக்கு வந்த இரயில் பிரயாணிகளின் மூலம், இந்தத் தொகை சரிக்கட்டப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

# காங்கிரசால் நாட்டில் சமதர்மம் வளருமா?

## தோழர் டாங்கே கருத்து

"ஒருசில அல்லது எல்லா தொழில்களுமே அரசாங்கத்தின் கைகளில் இருக்கிறது என்பதினாலேயே நாட்டின் பொருளாதாரம் 'சோஷலிச'ப் பொருளாதாரமாகிவிட முடியுமா? உதாரணமாக, இன்று இரயில்வேக்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றன. அதனால் அங்கு சோஷலிசப் பொருளாதாரம் இருப்பதாக நாம் கூற முடியுமா?

"தீர்மானிக்க வேண்டிய கேள்வி எல்லாம்—எங்கிருந்து நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதி திரட்டப்படுகிறது; யார் ஆட்சி நடத்துகிறார்கள்; நாட்டின் வருமானம் எப்படி உபயோகிக்கப்படுகிறது—என்பவைதான்.

"இப்பொழுதுள்ள நிலையில் நாட்டை ஆள்பவர்கள் பெரும் முதலாளிகளும், நிலப்பிரபுக்களும்தான்; அவர்கள் எல்லோரும் முதலாளித்துவக் கோள்கையில் விசுவாசம் கோண்டவர்கள்; இத்தகைய அமைப்பில், நாட்டின் வருமானம், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகிற துறைகளுக்குச் செலவிடப்படாமல், முதலாளிகள் நிலப்பிரபுக்கள் ஆகியோருக்கு ஏதோ அவர்களுடைய சொந்த வருமானம்போல் போய்ச் சேருகிறது.

"உதாரணமாக, தேசீயமயமாக்கப்பட்ட தொழில்களின் லாபம் கூட, நிலச்சுவான்தார் அல்லது தொழிலதிபர் ஆகியோருக்கு நஷ்டஈடாகப் போய்ச் சேருவதை நாம் காண்கிறோம்."

—இவ்வாறு, அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் பொதுச் செயலாளரும், கம்யூனிஸ்டுத் தலைவருமான எஸ். ஏ. டாங்கே, காங்கிரஸ் கட்சியின் சோஷலிச சமுதாய அமைப்புத் திட்டம் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பத்திரிகை நிருபர்களிடம் பேசிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தனிப்பட்டோரின் முதலாளித்துவத்துடன், அரசாங்க முதலாளித்துவத்தையும் வளர்ப்பதில் ஆக்கம் செலுத்துகிற வகையில் உள்ளது காங்கிரசின் சோஷலிச சமுதாய அமைப்புத் தீர்மானம்.

இது வரவேற்கத் தகுந்த முன்னேற்றம் என்பதுடன், ஊக்குவிக்கப்பட வேண்டியதுமாகும். ஆனால், இது செய்யப்படுமா—அதுவும் சரிவரச் செய்யப்படுமா என்பது, ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்களையும், இந்த அபிவிருத்தியை வளர்க்கிற சரியான பொருளாதாரக் கொள்கையையும் பொறுத்ததாகும்.

நமது இன்றைய பொருளாதார நிலையில், பொருளாதாரத் துறையில் மிக இன்றியமையாதனவாக உள்ள பிரிவுகளை அரசாங்கம்

(4-ம் பக்கம் பார்க்க)

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 25—1—1955 செவ்வாய்


# எழும்பூரும் - ஆவடியும்!

ஒரு கால்நூற்றாண்டுக்குப் பிறகு அகில இந்திய காங்கிரசின் அறுபதாவது மாநாடு, ஆவடியில் கூடி முடிவடைந்து விட்டது. உலகிலும்—உள்நாட்டிலும் ஏராளமான மாறுதல்கள் நடைபெற்றுள்ளன. அம்மாறுதல்களுக்கொப்ப, தனது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் காங்கிரஸ் கட்சியும் மாற்றிக்கொண்டு வந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

1927-ல் எழும்பூர் ஏரியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு காலஞ்சென்ற எஸ். சீனிவாச அய்யங்கார் அவர்களை நடு நாயகமாகக் கொண்டு நிகழலாயிற்று. அவர் சுட்டுவிரலின் ஆதிக்கத்தில் அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் இருந்து வந்தது. அவ்வாறான பெரும் செல்வாக்கு அவருக்கு இருந்தும்கூட, அப்பொழுது நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு அவர் வரவேற்புக் கழகத் தலைவராக இருக்கவில்லை. காலஞ்சென்ற பேட்டை - சி. என். முத்துரங்க முதலியார் அவர்கள்தான் அப்பணியினைப் புரிந்தார்.

இச்சம்பவத்தை, காலஞ்சென்ற மயிலை சீமானின் சமத்துவப் போக்கிற்கும், சமரச ஞானத்திற்கும், புகழ் விரும்பாத பெருங்குணத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டு என, அவரைச் சார்ந்தோர் அப்பொழுதும் கூறினர்; இப்பொழுதும் கூறிவருகின்றனர். மேற்படி சம்பவத்துடன், மேற்குறித்துள்ள சிறப்புகளைத் தொடர்புபடுத்திக் கூறுவதில் உண்மை இருந்தாலும் இருக்கலாம்; இல்லாமல் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் நூற்றுக்கு நூறு உண்மையாகும். அவ்வுண்மை இதுவரை கூறப்பட்டதுமில்லை—கூறவேண்டிய நிலை ஏற்பட்டதுமில்லை.

அதாவது, அம்மாநாடு நடைபெறுவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்புதான், சமூகப் புரட்சி இயக்கமான நீதிக் கட்சி பிறந்தது. பிறந்ததுடன் தீவிரமாகப் பரவியும் வரத் தொடங்கியது. 'எங்கும் பார்ப்பன மயம்' என்று நீதிக் கட்சி உரைத்துவந்த உண்மையை ஓரளவிற்கு மறைக்கவும், அக்கட்சி பரவும் வேகத்தைக் கூடுமானவரை தணிக்கவும், அதன் பிரச்சாரத்திற்கு ஒரு வாய்ப்பளிக்காமல் இருக்கவுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில், காலஞ்சென்ற மயிலை சீமான் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். ஆச்சாரியார் போன்ற ஒரு ஆணவக்காரராக அவர் இல்லாததுமன்றி, சிறிதளவு செயல்திறம் படைத்த அரசியல் தலைவராக அவர் இருந்தகாரணத்தால், மாநாட்டிற்குத் தன்னையே வரவேற்புக் கழகத் தலைவராக நியமித்துக் கொள்வதற்குப் பதிலாக, தனது ஏவல்படி ஆடிக் கிடந்த காலஞ்சென்ற பேட்டை முதலியாரை மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவராக, காலஞ்சென்ற மயிலை சீமான் நியமித்தார். தான் கூறவேண்டுமென நினைத்ததை, காலஞ்சென்ற முதலியார் வாயில் ஏற்றிக் கூறினார் மயிலை சீமான். தனது கருத்தும் வெளிப்படுத்தப்பட்டது; அதே நேரத்தில் நீதிக் கட்சியின் குற்றச்சாட்டிலிருந்து காங்கிரஸ் கட்சியும் காப்பாற்றப்பட்டது.

குறிப்பிட்ட ஒரு காலத்து அரசியல் நிலைக்கேற்ப, கூடுமானவரை பிறர் பழிப்புக்குத் தன்னை உள்ளாக்கிக்கொள்ளாமல், தனது நடைமுறைகளைத் திருத்தி அமைத்துக்கொண்டு செயலாற்றுவதில்தான் ஒரு அரசியல்வாதியின் செயல்திறம் அமைந்திருக்கிறது. வீண் பிடிவாதம் பேசி, தன்னையும் பழிப்புக்கு ஆளாக்கிக்கொண்டு, எடுத்த செயலையும் குட்டிச்சுவராக்கும் ஒருவரை அரசியல் மதியூகி என்றோ, செயலாற்றும் சாமர்த்தியம் பெற்றிருப்பவரென்றோ ஒருவரும் கொள்ளார். முதல் வழியைப் பின்பற்றி மறைந்தவர் மயிலை சீமான்; பின் வழியை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு, பதவிக்குப் பல்லிளித்துக் கிடப்பவர் பரிதாபத்துக்குரிய ஆச்சாரியார். நிற்க,

காலஞ்சென்ற மயிலை சீமானின் ஏவல்படி ஆடிக் கிடந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ், இன்று காமராசரின் 'கைப்பிடி'யாக மாறி இருக்கிறது. இம்மாற்றம் சாதாரணமானது அல்ல என்பதை, நுணுகி ஆராய்வோர் நன்கு புரிந்துகொள்வர். இம்மாற்றம் காங்கிரசில் ஏற்படுவதற்கு ஒரு கால்நூற்றாண்டுக்கு அதிகமாகத் தேவைப்பட்டிருக்கிறது.

இப் பெருமாற்றம் காங்கிரசில் சாதாரணமாக ஏற்பட்டுவிடவுமில்லை. நீதிக் கட்சி தூவிய சமத்துவ விதையின் ஒட்டுச் செடியே இது என்பதை ஒருவரும் மறந்துவிடக்கூடாது.

ஆதிக்க வகுப்பினரை எதிர்த்து, நீதிக் கட்சி உயர்த்திய போர்க் கொடியிலிருந்து உருவாகிய சமத்துவ—தன்மான உணர்வு காங்கிரஸ் கட்சியிலும் புகுந்து, ஆதிக்க வகுப்பினரின் ஆதிக்கத்திலிருந்து காங்கிரஸ் கட்சியை விடுவித்திருக்கிறது. இந்த ஒரு விளக்கத்தைத் தவிர, காலஞ்சென்ற சீனிவாச அய்யங்காரிடமிருந்த காங்கிரஸ், காமராசரிடம் தஞ்சம் புகுந்திருப்பதற்கு வேறு விளக்கம் கூறுவதற்கில்லை.

இம்மாற்றத்தை நாம் குறிப்பிட்டது, நீதிக் கட்சியின் உழைப்பையும், நமது சமத்துவக் கொள்கையின் பேராற்றலையும், தூய்மையையும், அது பெற்றுள்ள மகத்தான வெற்றியையும் எடுத்துக் காட்டுவதற்கே அல்லாது, வேறு ஒன்றுக்காகவும் அல்ல. காமராசர் அவர்களின் 'கைப்பிடி'யாக தமிழ்நாடு காங்கிரஸ் மாறி இருக்கிறது என்பதினால், காங்கிரசின் தன்மையும், குணமும் மாறிவிட்டிருக்கிறது என நாம் கொள்ளவுமில்லை; திராவிடப் பெருங்குடி மக்களின் விமோசனம் காங்கிரசில்தான் உள்ளது என நாம் எண்ணவுமில்லை.

ஆவடி, எழும்பூர் ஏரியைத் தோற்கடித்துவிட்டது. மயிலை சீமானை விருதுநகர் சாதாரண மனிதர், செயலாற்றலில் மிஞ்சிவிட்டார்!

காலஞ்சென்ற சீமானோ, சிறந்த வழக்கறிஞர்—பெரும் பெரும் செல்வந்தர்! விருதுநகராரோ, குறிப்பிடத்தகுந்த அளவு பள்ளிப் பயிற்சி பெறுதவர்; பெரும் பொருள் பெற்றில்லாதவர்!

ஆனால், செயலில் சீனிவாச அய்யங்காரையும் மீறிவிட்டிருக்கிறார்! ஆவடி, அதற்கு ஒரு கலங்கரை விளக்கம்!

நீதிக் கட்சியை ஒடுக்க மயிலை சீனிவாச அய்யங்கார், முத்துரங்க முதலியார் அவர்களை எழும்பூர் காங்கிரசிற்கு வரவேற்புக் குழு தலைவராக்கினார்!

பார்ப்பன மக்களிடமிருந்து ஆவடி காங்கிரசிற்கு எழுந்த எதிர்ப்பை இல்லாமல் செய்ய காலஞ்சென்ற சீனிவாச அய்யங்காரின் மகளான மூதாட்டி அம்புஜம்மாளை ஆவடி காங்கிரசிற்கு வரவேற்புக் குழுத் தலைவியராக காமராசர் நியமித்தார்!

காலஞ்சென்ற முத்துரங்க முதலியாரைப் போலவே ஆவடியில் வரவேற்புக் குழுத் தலைவியாயிருந்த திருமதி அம்புஜம்மாளும், இந்தச செல்வாக்கைக் கொண்டு, பிற்காலத்தில் காமராசருக்கு தீங்கு ஏதும் விளைவிக்கும் இயல்பற்ற, அப்பாவி நிலையிலிருப்பவர். எந்த ஒரு அரசியல்வாதியும் இந்த நிலையை சீர்தூக்கிப் பார்க்காமல் எக்காரியமும் செய்யமாட்டார்கள் என்று சிறுமதி படைத்த சிலர் எண்ணினால், அதை முழுவதும் தவறுடையது என்று கொள்ளவும் முடியாது.

ஆவடி காங்கிரசிற்கு பார்ப்பன மக்களின் எதிர்ப்பு இருந்ததா இல்லையா என்பதை அறிய, ஆவடி மாநாட்டைக் கிண்டல் செய்து, 'இந்து' இதழில் பார்ப்பன முதுகிழவர் நாகராஜ சர்மா எழுதிய கண்டனக் கடிதம் ஒன்றே போதிய சாட்சியாகும். தேர் திருவிழாக்களில் தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் கோடி கோடியாக விரயமாகும் பணத்தைக் குறிப்பிடாது இருந்துவந்த சர்மா, ஆவடியில் செலவான தொகையைச் சுட்டிக்காட்டிக் கண்டித்ததில், அரசியல் அடிப்படை இல்லை என எவரும் கூறார்!

தமிழ் நாட்டு அரசியலில், ஆச்சாரியாருக்கும், காமராசருக்கும் உள்ள உள்ளடிப் போராட்டம் நாடு அறிந்த ஒன்றேயாகும். ஆச்சாரியார் விஷமத்தை ஒடுக்க, அம்புஜம்மாள் அவர்களை சிறந்ததோர் சாதனமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் காமராசர்! இந்த வகையில், எழும்பூரில் முத்துரங்க முதலியார் அவர்களை பயன்படுத்துவதின் மூலம் மயிலையார் பெற்ற வெற்றியிலும் அதிகப்படியான வெற்றியை ஆவடியில் அம்புஜம்மாளை பயன்படுத்துவதின் மூலம் காமராசர் பெற்றிருக்கிறார்!

எழும்பூருக்கும் — ஆவடிக்கும் உள்ள கால தூரம் ஒரு கால் நூற்றாண்டுக்கு அதிகம். இரண்டுக்கும் உள்ள சமுதாய உறவு முறையில் உருவாகியுள்ள மாற்றத்திற்கோ, பல நூற்றாண்டுகாலத் தொலைவு உள்ளது! இப்புரட்சிகரமான மாற்றம், காலஞ் சென்ற வெள்ளுடை வேந்தர் தியாகராயர், அரசியல் மேதை டாக்டர் நாயர், செயல் திறம் படைத்த பானகல் ஆகியவர்களின் அரிய உழைப்பினால் உருவானது. நமது மூலக் கோட்பாடு ஒன்று ஆவடி மாநாட்டில் முழு வெற்றி பெற்றிருப்பது கண்டு நாம் மகிழ்கிறோம்.

## பஞ்சு நூற்பு ஆலைகளில் இயங்கும் கதிர்கள்

### உலகத்தின் மொத்த எண்ணிக்கை

சென்ற ஆண்டு ஜூலை திங்கள் 31-ந் தேதியன்று வெளியிடப்பட்ட கணக்கு விவரப்படி, உலகிலேயே மொத்தமுள்ள பஞ்சுநூற்பு ஆலைகளில் இயங்கிக்கொண்டிருக்கும் பஞ்சு நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை 12,95,19,000 என்றும், 1954-ம் ஆண்டு ஜனவரி திங்களில் இந்த எண்ணிக்கை 12,94,49,000-மாக இருந்ததென்றும், 1953-ம் ஆண்டு ஜூலை திங்கள் முடிய இருந்த எண்ணிக்கை 12,93,22,000 என்றும் தெரிய வருகிறது.

1954-ம் ஆண்டு ஜூலை 31 முடிய உள்ள 6 மாதங்களில், மொத்த பஞ்சாலைகளில் உபயோகிக்கப்பட்ட பஞ்சின் அளவு 1,78,24,000 பேல்களாகும். இதில் எல்லாவித ரகமான பஞ்சும் அடங்கியிருக்கிறது. இதற்கு முன்னுள்ள 6 மாதங்களில் இதன் எண்ணிக்கை 1,78,54,000 அதிகமாக இருந்தது. இதற்கு முன்னர், 1953 ஜூலை இறுதியில் மொத்தம் 1,74,82,000 பேல்களாகும்.

இயங்கிக்கொண்டிருக்கும் பஞ்சு நூற்புக் கதிர்களின் எண்ணிக்கையில் பிரிட்டன்தான் முதலிடம் வகித்து வருகிறது. சென்ற ஆண்டு ஜூலை திங்கள் முடிய பிரிட்டனில் உள்ள கதிர்களின் எண்ணிக்கை 2,65,63,000 ஆகும். இந்த எண்ணிக்கை பிரிட்டனில், இதற்கு முந்திய ஆறு மாதத்தில் இருந்ததைக் காட்டிலும் 1,09,000 அதிகமாகும்

பிரிட்டனுக்கு அடுத்தபடியாக அமெரிக்காதான் இரண்டாவது இடத்தைப் பிடித்துக்கொள்கிறது. அமெரிக்காவில், கடந்த ஜூலை இறுதி வரையிலுள்ள மொத்த கதிர்களின் எண்ணிக்கை 2,27,07,000 ஆகும்.

அமெரிக்காவுக்கு அடுத்து, இந்தியா மூன்றாவது இடத்தில் நிற்கிறது; இந்தியாவிலுள்ள மொத்தக் கதிர்களின் எண்ணிக்கை, 1,17,21,000 ஆகும்.

ரஷ்யா 4-வது இடத்திலும், ஜப்பான் 5-வது இடத்திலும், பிரேசில் 6-வது இடத்திலும் நின்று வருகின்றன.

## பட்டம் ஆட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

திரு-கொச்சி மாநில சட்டசபை ஜனவரித் திங்கள் 28-ந் தேதி கூடும்போது, அங்குள்ள ம. சோ. கட்சி மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை திரு-தமிழ்ப் பகுதி சட்டசபை உறுப்பினருள் ஒருவரான தோழர் எம். சிதம்பரநாத நாடார் கொண்டு வருவார் எனத் தெரிகிறது.

அந்த சட்ட சபையில் தோழர் சிதம்பரநாத நாடார்தான் தி. த நா. காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் தலைவராகும். அவர், திரு-தமிழ்ப் பகுதியின் பிரதிநிதியாக கடந்த காங்கிரஸ் மந்திரிசபையில் மந்திரியாக இடம் பெற்றிருந்தவர்.

## ஈராக் - துருக்கி ஒப்பந்தம்

### எகிப்து பிரதமர் எச்சரிக்கை

"துருக்கியுடன் தான் செய்து கொள்கிற ஒப்பந்தப்படி, ஈராக் ஒரு யுத்தத்தில் இழுக்கப்படுமானால், இதர அராபிய நாடுகளும் அந்த யுத்தத்தில் இழுக்கப்படும்; ஏனெனில், அவர்கள் செய்து கொண்டிருக்கும் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று இருக்கிறது," என்று எகிப்து பிரதமரான கர்னல் நாசர் தெரிவித்திருக்கிறார்.

எகிப்து கூட்டிய அராபிய நாடுகளின் பிரதமர்கள் மாநாட்டில் பேசிய அவர், ஈராக், ரஷ்யாவுடன் கொண்டிருந்த ராஜீயத் தொடர்புகளை அறுத்துக்கொண்டதின் மூலம், மேற்கு வல்லரசுகளுடன் அது கொண்டுள்ள இணைப்பை குறிப்பிட்டுக் காட்டியுள்ளது என்று கூறினார்.

அந்த மாநாட்டில் சவூதி அரேபியா, லெபனான், ஜோர்தான், சிரியா ஆகிய நாடுகள் கலந்துகொண்டன என்று தெரிகிறது.

## இந்தியக் குடிமகனாக விழையும் பிரிட்டிஷ் விஞ்ஞானி

ஆக்ஸ்போர்டு, ஜன. 25—

பிரிட்டிஷ் விஞ்ஞானியான பேராசிரியர் ஜே. பி. எஸ். ஹால்டேனே என்பவர், தான் ஒரு இந்தியக் குடிமகனாக இருக்க விழைவதாகத் தெரிவித்திருக்கிறாராம்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக சோஷலிஸ்டு சங்கத்தில் பேசிய அவர் அண்மையில் இந்தியா சென்றுவிட்டுத் திரும்பியிருந்தார்.

"இந்தியாவில் வாழ்கிற வாய்ப்புப் பெற்ற ஒருவர், ஒரு மிகச் சிறந்த நாகரீகம் பெற்ற சமூகத்தினரிடையே வாழ்கிற உணர்வைப் பெறுவது நிச்சயம்; ஐரோப்பிய அல்லது, அமெரிக்க நகரங்களிலிருப்பதைக் காட்டிலும், நான் அங்கு (இந்தியாவில்) வாழ்வதையே விரும்புகிறேன்; நான் 1892-ல் ராணி விக்டோரியா காலத்தில் பிறந்தேன்; இப்போது ராணி எலிசபெத்தின் குடிமகனாக இருக்கிறேன்; இந்தியக் குடியரசு நாட்டின் குடிமகனாக இருந்து இறக்க விரும்புகிறேன்—அவர்கள் என்னை ஏற்றுக்கொள்வதானால்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## அண்ணாமலைபல்கலைக்கழக வெள்ளி விழா

### பலருக்குக் கௌரவப் பட்டங்கள்

அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா வருகிற பிப்ரவரி மாத முதல் வாரத்தில் நடைபெறும் எனத் தெரிகிறது.

மைசூர் ராஜப்பிரமுகர் விழாவிற்குத் தலைமை தாங்கி, காலஞ்சென்ற ராஜா சர். அண்ணாமலை செட்டியாரின் உருவச் சிலை ஒன்றைத் திறந்து வைப்பார் எனத் தெரிகிறது.

விழாவின்போது 'இலக்கியப் பேரறிஞர்கள்' (டி., லிட்.) என்ற கௌரவப் பட்டங்கள் கீழ்க்கண்டவர்களுக்கு சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தரான கவர்னர் பிரகாசா தலைமையில் வழங்கப்படும் எனத் தெரிகிறது.

மைசூர் ராஜப்பிரமுகர், செட்டிநாடு ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார், டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர், எஸ். இ. ரகுநாதன், நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார், எம். ரத்தினசாமி, டாக்டர் ஏ லட்சுமணசாமி முதலியார் ஆகியோருக்கு அந்தப்பட்டங்கள் வழங்கப்படும் என்று தெரிகிறது.

சென்னை ஆவடியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் 'ஜேப்படி' செய்ததாக 20 பேர்களை போலீசார் கைது செய்துள்ளார்களாம்!

# கலைகள் மக்களின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்

## கலைகள் 'கட்டு'க்களின்றித்தான் வளர முடியும்

### திருவரங்கத்தில் தோழர் சம்பத் விளக்கவுரை

"கலைகள் யாவும் மக்களின் கலைகளாக இருக்கவேண்டும்; அவைகள் மக்களின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்; அப்பொழுதுதான் அவைகளுக்கு மதிப்பு அதிகம். மக்களின் உள்ள உணர்ச்சிகளை பிரதிபலிக்கின்ற கலைதான் மக்களின் கலையாக மாற முடியும்; அப்படிப்பட்ட கலைகள், 'கட்டுக்கள்' அற்ற நிலையில் தான் வளரமுடியும்; எனவே, அரசாங்கம், அவைகளைத் தங்கள் அதிகாரத்திற்குள் அடக்கிவைத்திருப்பது தவருனதாகும்."

"தமிழர்கள் ஒரு சமுதாயமாக மாறவேண்டும்—ஒரு சக்தியாக வரவேண்டும்—என்ருல், ஜாதி, சமயங்களினின்றும் விடுதலை பெற வேண்டும்; பழங்காலப் 'பாசி'களைக் களைந்தெறிய வேண்டும்; தடைக் கற்களை உடைத்தெறிய வேண்டும்; அப்பொழுதுதான், நாம் உய்ய முடியும். அறிவியக்கம் — சுயமரியாதை இயக்கம்— பகுத்தறிவு இயக்கம் இதற்காகத்தான் பாடுபடுகிறது. மக்கள் மனதிலே மகத்தானதோரு மாற்றத்தை—விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும், விஞ்ஞான, அரசியல், பொருளாதார மற்றெல்லாத் துறைகளிலும் மக்கள் மாண்புற்றுத் திகழ வழிவகுப்பதும்தான் எங்கள் நோக்கமாகும்."

"அறிவியக்கத்தின் ஆக்க வேலைகள் ஒன்றன்பின் ஒன்ருக வெற்றி பெற்றுக்கோண்டு வருகின்ற இந்நாட்களிலே, 'மக்களுக்கு அறிவு வளர்ந்தால் நம் வாழ்க்கை பறிபோய்விடுமே' என்றெண்ணுகின்ற ஒரு சில சுயநலக்காரர்கள், மக்களின் உணர்வுகளை அழிக்கப் புறப்பட்டிருக்கிருர்கள்; என்ருலும், பகுத்தறிவு, 'வெற்றிக் கொடி' நாட்டப்போவது நிச்சயம். மக்களின் உள்ளத்திலே நல்லுணர்வுகள் பெருகுவதற்கு இதுபோன்ற திருநாட்கள் பயனடைய வேண்டும்."

—இவ்வாறு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், திருவரங்கம் அறிவியக்கப் படிப்பகத்தின் ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினர்.

17—1—55-ல் திருவரங்கம் கீரைக்காரத் தெருவில் அமைந்துள்ள அறிவியக்கப் படிப்பகத்தின் மூன்ரும் ஆண்டுவிழாவும், பொங்கல் விழாவும் தோழர் அன்பில் தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. சேதுமாணிக்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

மேலும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தொடர்ந்து பேசுகையில் "கடந்துபோன ஆறு ஏழு ஆண்டுகளாக இந்தப் பொங்கல் திருவிழா நாட்களில் இதுபோன்ற கூட்டங்கள் போட்டு, ஏன், நாம் பொங்கல் திருவிழாவைக் கொண்டாட வேண்டும் என்பதை விளக்கிய பெருமை பெரியார் ஈ. வெ. ராமசாமியையும், திராவிடர் இயக்கத்தையுமே சாரும்" என்ருர்.

## விஞேபா பாவேக்கு - அமெரிக்க சிஷ்யை

### அவரது கொள்கைபற்றி புத்தகம் எழுதுவார்

சவுதாம்ப்டன், ஜன. 24—

பூமி தான இயக்கத்தில் தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஆச்சார்யா விஞேபா பாவேயைப் பற்றி அறிந்துகொள்ள நான்சி என்ற 21 வயதுடைய அமெரிக்க இளம் பெண் ஒருவர் இந்தியாவுக்கு வந்திருக்கிருர். மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் ஆங்கில ஆசிரியராக இருக்கும் அப்பெண்மணியிடம், அங்கே கல்வி பயிலும் சில இந்தியர்கள், விஞேபா பாவேயின் குணங்களை அறிந்து, அவருடைய கொள்கைகள் பற்றி எழுதுமாறு கேட்டுக்கொண்டார்களாம்.

அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி நான்சி என்னும் அப்பெண்மணி இப்போது இந்தியாவுக்கு வந்திருக்கிருர். அவர், விஞேபா பாவேயின் சுற்றுப் பயணங்களில் கலந்துகொண்டு அவரைப் பற்றிய விபரங்களைச் சேகரிப்பார் என்று தெரிகிறது. அவர், தன்னுடன் குறைந்த உடைகளையே கொண்டு வந்திருக்கிருர் என்றும் தெரிகிறது.

"நான் பட்டினி கிடக்க வேண்டிய நேரம் வந்தாலும் வரலாம்; ரொட்டியும் தண்ணீரையும் கொண்டே நான் வாழ்ந்துவிடுவேன்; மண்குடிசையிலும், அல்லது வீடுகளிலும், சில நேரங்களில் ராஜாக்களின் அரண்மனைகளிலும் நான் உறங்க நேரிடலாம்; நான் வருவது பற்றி விஞேபா பாவேக்குத் தெரியாது; ஆனல், நான் வருவது அவருக்கு மகிழ்ச்சியையே அளிக்கும்,"

என்று, தோழியர் நான்சி கூறியுள்ளார்.

இந்தியாவில் சில மாதங்கள் தங்கியிருந்து, தனது வேலை முடிந்த பின்னர், தான் மீண்டும் மிச்சிகன் பல்கலைக் கழகத்திற்குச் செல்லப் போவதாகவும் அப்பெண்மணி கூறியுள்ளார்.

## பாகிஸ்தானுக்கு வெளிநாட்டு உதவி!

### இவ்வாண்டில் ரூ. 40 கோடி கிடைக்கும்

கராச்சி, ஜன. 23—

1954—55-ம் ஆண்டில் பாகிஸ்தான், வெளி நாடுகளிலிருந்து ரூ. 40 கோடி உதவி பெறுமென்று தெரிகிறது.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, 'போர்டு' அற உதவி நிலையம், உலக பாங்கி, ஐ. நா. சபை ஆகியவைகளிடமிருந்து இந்த உதவி கிடைக்குமென்று தெரிகிறது.

இதுவரை, பாகிஸ்தான் 29.80 இலட்சம் ரூபாய் உதவியைப் பெற்றிருக்கிறதாம். இதுவன்றி, அமெரிக்காவிடமிருந்து 21·50 இலட்சம் ரூபாய் பெறுமான கோதுமையை தனியாகப் பெற்றுக்கொண்டிருக்கிறதாம்.

1954—55-ம் ஆண்டில், பாகிஸ்தான் வழக்கம்போல் அபிவிருத்தி திட்டங்களுக்கான உதவியைப் பெறுவதுமட்டுமின்றி, மூலப் பொருள்களையும் பெறுமென்று சொல்லப்படுகிறது. கொழும்புத் திட்டம், ஐ.நா. சபை, அமெரிக்காவின் நான்கு அம்சத் திட்டம், 'போர்டு' அற உதவி நிலையம் ஆகியவைகள் பாகிஸ்தானுக்கு தொழில் நுணுக்க உதவியை அளிக்க இருக்கின்றன என்று தெரிகிறது.

## ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள்

### உருவே இல்லாத மாமிச பிண்டம் ஐந்தாவதாகப் பிறந்ததாம்

திருவனந்தபுரம், ஜன. 24—

உல்லூர் மருத்துவ மனையில் திருமதி பி. எஸ். கௌரி என்ற 30 வயதுடைய பெண்மணிக்கு ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள் பிறந்ததாகக் கூறப்படுகிறது. இந்த 5 குழந்தைகளும், பிறந்த 2-வது நாளிலேயே இறந்துவிட்டனவாம். இவற்றுள் ஒன்று, உருவே இல்லாத வெறும் மாமிசப் பிண்டமாக இருந்தது என்றும் மற்ற நான்கும் பெண் குழந்தைகள் என்றும் தகவல் கிடைத்துள்ளன.

இக்குழந்தைகள் யாவும் 7-வது மாதத்திலேயே பிறந்துவிட்டதால் ஒவ்வொன்றும் 2 ராத்தலுக்கும் குறைவாகவே எடையுள்ளனவாக இருந்தனவாம். இக்குழந்தைகளின் தாயார் தற்போது சுகமாகவே இருந்து வருகிருராம்.

5-வது குழந்தையான வெறும் மாமிசப் பிண்டம், ஆராய்ச்சி செய்யப்படுவதற்காக மருத்துவமனையில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாம்.

## பார்ப்பனர்கள் எளிய வாழ்க்கையில் உயரிய சிந்தனை கொண்டவர்களாம்

### டாக்டர் கோஷ் கூற்று

பாட்ஞ, ஜன. 23—

"தென்னிந்தியர்களிடை உள்ள தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகோள்ளும் மனப்பாங்கு பாராட்டுதலுக்கு உரியது; தென்னிந்திய பார்ப்பனர்களின் எளிய வாழ்க்கையும், உயர்ந்த (?) சிந்தனையும் புகழ்ச்சிக்குரியனவாகும். அவர்கள் அறிவு படைத்த சமுதாயத்தினராகத் தொடர்ந்து இருந்துவந்தபோதிலும் அவர்களது வாழ்க்கைத் தரம் மிக சாதாரணமானதாகவே உள்ளது,"

இவ்வாறு, பாட்ஞ பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசிய கல்கத்தா பல்கலைக் கழக துணை வேந்தரான டாக்டர் ஜி. சி. கோஷ் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், மாணவர்கள் தங்கள் விடுமுறை காலத்தை நாட்டினைச் சுற்றிப் பார்த்து விஷயங்களைத் தெரிந்துகொள்கிற வகையில் உபயோகமானதாகக் கழிக்க வேண்டும் என்றும், மாணவர்கள் நாட்டின் பல பகுதிகளைப் பற்றி புத்தகத்தில் மட்டுமே படித்தறிந்துகொள்கிருர்களென்றும், நேராகச் சென்று அங்குள்ள மக்களையும், அவர்களது எண்ணங்களையும் புரிந்துகொள்வதின் மூலம், நாட்டில் நிலவுகிற சிறிய சிறிய சச்சரவுகளும், வேற்றுமைகளும் மறையக் கூடும் என்றும் பேசியிருக்கிருர்.

மேலும், மாணவர்கள் கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வமும், ஒழுக்கமும் உயர் பண்பும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார் எனத் தெரிகிறது

## தோற்றவரைப் பதவியில் அமர்த்த முயற்சி

### பஞ்சாப் சர்க்காரின் போக்கை எதிர்த்து அகாலி தளத்தவர் குமுறல்

சாந்திநகர், ஜன. 23—

பஞ்சாப் மாநில சர்க்காருக்கும்—'அகாலி தள' இயக்கத்திற்கும் இடையே ஒரு பெரும் தகராறு உருவாகி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

'குருத்துவார்கள்' என்ற சீக்கிய மத நிறுவனங்களை நிர்வகிக்கிற 'போர்டு' அங்கத்தினர்களாக 68 பேர்களின் பெயர்களை சர்க்கார் வெளியிட்டிருப்பதே தகராறு எழுவதற்குக் காரணமாக அமையக் கூடும் என்று கூறப்படுகிறது.

தங்களால் தோற்கடிக்கப்பட்ட 'கால்சா தள'த்தைச் சேர்ந்தவர்களை மீண்டும், 'குருத்துவார்' நிர்வாகச் சட்டத்திற்கு எதிராக, அதிகாரத்திற்குக் கொண்டுவர பஞ்சாப் சர்க்கார் எத்தனித்திருப்பதாக மாஸ்டர் தாராசிங்கை தலைவராகக் கொண்ட அகாலி தளத்தவர் குற்றஞ்சாட்டியுள்ளனராம்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அகாலி தளத்தவர் கைக்கு வந்துள்ள கமிட்டியே அந்த 'போர்டு'க்கான உறுப்பினர்களை நியமனம் செய்யும் அதிகாரத்தையுடையது; சர்க்காருக்கு அந்த அதிகாரமில்லை; எனவே, அந்த அங்கத்தினர் நியமனம் செல்லாதது என்று நீதிமன்றத்திலும் அகாலி தளத்தவர் வழக்குத் தொடுத்திருக்கிருர்களாம்.

'குருத்துவார்' விஷயங்களில் இன்னும் அகாலிதளம் பொறுப் பேற்கவில்லையாம்.

'குருத்துவார்'களின் நிர்வாகத்தைக் கவனிக்கிற கமிட்டிகளுக்கான அங்கத்தினர்களை நியமிக்கிற அதிகாரம் இப்போதுள்ள 'போர்டி'ற்கு, அது புதுப்பிக்கப்படுகிற வரையில் அதிகாரம் இருப்பதாக பஞ்சாப் மாநில சர்க்காரும் மறுப்பு அறிக்கை ஒன்றைத் தந்துள்ளனர் என்றும் தெரிகிறது.

## மாயவரம் பஞ்சாயத்து மகாசபை கூட்டம்

17—1—55 மாலை 4½ மணிக்கு மேற்படி கூட்டம் மாயவரம் காளியாகுடி சிற்றுண்டி நிலைய திரு. மேல்மாடியில் கே. ராமையா தலைமையில் நடைபெற்றது. திரு. ஜே. டி. ஆசீர்வாதம் அவர்கள் நிர்வாக சம்பந்தமாய் பஞ்சாயத்துத் தலைவர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைபற்றி சிறிது நேரம் பேசியபின், மாயவரம் தாலுகா மாநாட்டை மார்ச்சு 15-ந்தேதிக்கு மேல் ஏப்ரல் 15-க்குள் நடத்திவிடுவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## 5,000 மைல் சுற்றுபயணம்

ஆனைமலையைச் சேர்ந்த 28 வயதுள்ள தோழர் ஏ. சோமசுந்திரம், 26 வயதுள்ள வி. ஆறுமுகம் ஆகிய இருவரும் பிப்ரவரி திங்கள் முதல் தேதியன்று, ஆனைமலையிலிருந்து புறப்பட்டு, இந்தியாவில் 5,000 மைல் தூரம் சைக்கிள் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாகவும், இந்தப் பிரயாணத்தை தோழர் ஏ. எஸ். வெங்கடாசலம் அவர்கள் துவக்கிவைப்பார்என்றும் மேற்குறிப்பிட்ட இருவரும் அறிவித்துள்ளனர்.

## பஞ்சாங்கம் தீக்கிரை!:

தங்களை அடிமைகளாக்கும் பஞ்சாங்கத்தை பார்ப்பனர்கள் உபயோகிப்பதாலும்,மக்கள்முன்னேருமல் தடுத்து நிறுத்த 'தளை'களில் ஒன்ருக அதைப் பயன்படுத்துவதாலும், காஞ்சீபுரம் இந்து தமிழர் சங்கத்தில், தோழர் ஆ சி. கோவிந்தராசு எம். ஏ., பி. எல்., அவர்கள் கடந்த 13-ந் தேதியன்று பஞ்சாங்கத்தைத் தீயிட்டுக்கொளுத்தினர். (ஏ.வி.)

## தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

**சென்னை:**

14—1—55 காலை 8 மணிக்கு சென்னை 12-வது வட்டம் மஜீத் மன்றச் சார்பில் தோழர் டாக்டர் அஜ்சுதீன் தலைமையில் நடைபெற்ற விழாவில், தோழர்கள் எஸ். கே. சாமி, வி. ஆறுமுகம், என். பி. கோபால், வி. எஸ் பார்த்தசாரதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

* * *

வட சென்னை தாழ்த்தப்பட்டோர் முன்னேற்ற கழகச் சார்பில் 14—1—55ல், தோழர் ஐ. சுப்பிரமணியம் தலைமையில் மாலை 3 மணிக்கு நடைபெற்ற விழாவில், விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற பிறகு, தோழர்கள் துரைராஜ், சாரங்கம், கோபால், ஆகியோர் 'வள்ளுவர் வகுத்த வழி' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். பின்னர், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தோழர் வி. பி. முருகையா பரிசுகள் வழங்கினர்.

* * *

14—1—55 காலை 9 மணிக்கு சென்னை-திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில், தோழர் பி. வி. அரங்கனுதம் தலைமையில் விழா சிறப்புற நடைபெற்றது. இறுதியில் ஏழைகளுக்கு கஞ்சி வார்க்கப்பட்டது.

**திருச்சி—உறையூர்**

மேட்டுத் தெரு சங்கரன் படிப்பகத்தின் சார்பில் 16—1—55 மாலை 6 மணிக்கு, தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்ற விழா கூட்டத்தில் தோழர்கள் க. அன்பழகன், அறிவழகன், கோவைச் செழியன், திருநாவுக்கரசு ஆகியோர் பேசினர்.

**அண்ணமலை நகர்:**

19—1—55ல், அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பில், பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மன்றத்தில், 'தமிழர் விழா' திரு. ஆ. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் உ. பழனி, மெ. சுந்தரம், க. அறிவழகன் ஆகியோர் பொங்கல் விழா பற்றி சொற்பொழிவாற்றினர். தோழர்கள் அனைவருக்கும் மலர் மாலைகளுக்குப் பதிலாகக் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

**தாராவி—பம்பாய்:**

14—1—55 பகல் 12 மணியளவில் அன்பகத்தில், சௌந்திர பாண்டியனர் பகுத்தறிவு மன்றச் சார்பில், தோழர் மா. இரா. குறள் தாசன் துவக்கிவைக்க, தோழர் ம. இர. எ. ரெத்தினசாமி தலைமையில் நடைபெற்ற விழாவில், தோழர்கள் சா. தர்மராசன், வடவைக்குயில், கே. எம். தர்மலிங்கம், எம். எஸ். கணபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் ஐ. ராயப்பன், எம். எஸ். கணபதி இன்னிசை விருந்தளித்தனர்.

**வீரக்கவுண்டனூர்:**

16—1—55ல், தி. மு. கழகத் தோழர்களால், தோழர் வெ. சி. கோவிந்தன் தலைமையில், கழகக் கட்டிடத்திற்கு முன்னுள்ள மைதானத்திலிருந்து, பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களின் உருவப் படம் அலங்கரிக்கப்பட்ட வண்டியுடன் ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் சிலம்பு விளையாட்டுகளும் நடைபெற்றன.

# உலக அரங்கில்

## சோவியத் ரஷ்யா

வழக்கம் போலில்லாமல், பல வாரங்களுக்கு முன்னதாகவே, சோவியத் பார்லிமெண்ட் அடுத்த மாதம் 3-ந் தேதி கிரெம்லினில் கூடுமென சோவியத் ரேடியோ அறிவித்திருக்கிறது.

நாடு முழுதும் உள்ள 13,000 பிரதிநிதிகள், மார்ச்சு மாதத்தில் அல்லது எப்ரல் மாதத்தில், இரண்டு சபைகளிலும் கூடி, அரசாங்கத்தின் வரவு—செலவு திட்டத்திற்கு ஒப்புதல் தருவதும், சென்ற ஆண்டில் பிறப்பித்துள்ள கட்டளைகளை ஆமோதித்து நிறைவேற்றுவதும் வழக்கமாகும்.

இவ்வழக்கத்திற்கு மாறான பார்லிமெண்ட் கூட்டம், மேற்கத்திய வல்லரசுகளிடை பலவிதமான யூகத்திற்கு இடமளித்துள்ளன.

மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் பாரிஸ் ஒப்பந்தத்தை நிறைவேறவொட்டாமல் செய்வதற்காகவாவது அல்லது தாமதப்படுத்துவதற்காவது, சோவியத் ரஷ்யா எடுத்துக்கொள்ளும் புதிய முயற்சியாக இக்கூட்டம் இருக்கக் கூடும் என மேற்கு வல்லரசுகள் எண்ணுகின்றன.

பாரிஸ், லண்டன், வாஷிங்டன் ஆகிய மூன்று இடங்களிலும் இருந்த தனது ஸ்தானிகர்களை மாஸ்கோவிற்கு அழைத்திருப்பதானது, மேற்படி நினைப்பை வலியுறுத்துவதாக இருக்கிறது எனவும் வல்லரசுகள் நம்புகின்றன.

அதுவுமன்றி நவசீனாவிற்கும் பார்மோசாவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்த்துவைப்பதில் மேற்கத்திய வல்லரசுகள் கொண்டுள்ள கருத்து பற்றி ஆலோசிக்க மேற்படி ஸ்தானிகர்களை அழைத்திருக்கக்கூடும் எனவும் நம்பப்படுகிறது.

1953 மார்ச்சு மாதத்தில் ஸ்டாலின் இறந்ததும் சுப்ரீம் சோவியத்தின் சிறப்புக் கூட்டம் நடைபெற்று இருக்கிறது. 1945-ல், வழக்கம்போல், ஏப்ரலில் மேற்படி கூட்டம் நடைபெற்றுள்ளது.

★

## அமெரிக்கா

ஆசியாவின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்காக, 50-கோடி டாலர் வரையில் 1956-ம் ஆண்டிற்குச் செலவிட, குடியரசுத் தலைவர் ஐசனோவர் தீர்மானித்திருப்பதாக, அமெரிக்க நிதி அலுவலர் ஜார்ஜ் அம்ரே அறிவித்துள்ளார்.

இப்பெருந் தொகை, ஆசியப் பகுதிகளின் இராணுவத் தேவைக்காக அமெரிக்கா கொடுத்துள்ள உதவித் தொகைக்கு அப்பாற்பட்டதாகும்.

நவசீனாவால் தண்டிக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள 11-அமெரிக்க விமானிகளை, அவர்களின் உறவினர்கள் பார்த்துப் பேசுவதற்கு, சீனா உரிமையளித்தது; அவ்வுரிமையைச் செயலாற்ற அமெரிக்க அரசாங்கம் விரும்பவில்லை; "கைதாகி உள்ள அமெரிக்க விமானிகளைக் காண, அவர்களுடைய சுற்றத்தார்களை அனுமதிக்க முடியாது," என அமெரிக்க அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இம்முடிவு, "புதுமையானதோ எதிர்பாராததோ அல்ல" என்றும், "இரு நாட்டுக்கு மிடையில் உள்ள குழப்பத்தைத் தீவிரப்படுத்துவது தான் நோக்கமே ஒழிய கைதாகி உள்ள தனது குடிமக்களைப் பற்றிய அக்கரை தனக்குக் கிடையாது" என்பதைத்தான் அமெரிக்காவின் உரிமை மறுப்பு விளக்கிக் காட்டுகிறது என்றும், நவசீனாவின் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

★

## சீனா

தேசீய சீனா எனக் குறிப்பிடப்படும் 'பார்மோசா தீவு, சீன நாட்டின் ஒரு பகுதி. அத்தீவை விடுவிப்பது என்பது சீனாவின் தன்னாட்சி உரிமையையும் உள்நாட்டு விவகாரத்தையும் பொருந்தியதாகும். எனவே, இதில் வெளியார் குறுக்கிடுவதை சீனா ஒரு நாளும் அனுமதிக்காது' என நவசீன பிரதமர் சூ-என்-லாய் அறிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட ஐக்கிய நாட்டுச் சபைக்கு அதிகாரம் கிடையாது எனவும், தனக்கு உரிமை இல்லா விவகாரத்தை ஐக்கிய நாட்டு சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவருவது கூடாது எனவும், ஐக்கிய நாட்டுச் சபையின் அமைப்பு விதிகள் விளக்கமாக உரைப்பதாகவும், எனவே, பார்மோசா எனும் தெய்வான் தீவை விடுவிக்க சீன மக்கள் மேற்கொள்ளும் நடவடிக்கையில் குறுக்கிட ஐக்கிய நாட்டுச் சபைக்கோ, வேறு தனிப்பட்ட அரசாங்கங்களுக்கோ துளியும் அதிகாரம் கிடையாது எனவும் மேற்படி அமைச்சர் முடிவாகக் கூறியுள்ளார்.

தேசீய சீனாவுடன் அமெரிக்கா செய்துகொண்டுள்ள நட்புரிமை பாதுகாப்பு உடன்படிக்கையானது, பார்மோசாவிலும் அதன் வளை குடாவிலும் அமெரிக்கப் படைகள் நிறுத்தப்பட்டிருப்பதால் சீனாவிற்கு ஏற்பட்டுள்ள மனக் கொதிப்பை, மேலும் கூட்டுவதாக உள்ளது எனவும் மேற்படி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மறுபடியும் இவ்வாண்டில் பார்மோசாவை சீனா கைப்பற்றிக் கொள்ளும் என்று சீனாவின் உள்நாட்டு மந்திரி ஒலிபரப்பியுள்ளார்.

சியாங்-கே-ஷேக்கின் வசமிருந்த காட்ரஸ் தீவை நவ சீனத் துருப்புகள் கைப்பற்றிவிட்டன. டாச்சென் தீவின் பகுதியிலும் நவ சீனாவின் படையெடுப்பு பெரிய அளவில் எதிர்பார்க்கப்பட்டு, அங்குள்ள சியாங்கின் படைகளை சேதமில்லாமல் அப்புறப்படுத்தும் பணியில், அமெரிக்க 7-வது கடற் படை தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. சென்ற வாரம் நவ சீனாவால்விடுவிக்கப்பட்ட சிக்கியாங்ஷான் தீவைச் சுற்றி தேசீய சீனா வெடிகுண்டுகளை வீசிவருவதாகவும் நம்பப்படுகிறது.

★

## யூகோஸ்லாவியா

யூகோ அரசாங்கத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்தார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள, யூகோ கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களான மல்ஓவன் டிஜிலாஸ், வால்டிமீர் பெடிஜ்ர் ஆகிய இருவரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வெளிநாட்டு பத்திரிகை நிருபர்கள் நீதிமன்றத்தில் அனுமதிக்கப்படவில்லை.

இவ்வழக்கின் தொடர்பாக வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் ஏற்கனவே நடந்துகொண்டுள்ளமுறையானது விசாரணையை உள்ளது உள்ளவாறு தங்களுடைய பத்திரிகைகளுக்கு அறிவிப்பார்கள் என நம்ப முடியாமல் செய்துவிட்டிருப்பதால், மேற்படி பத்திரிகை நிருபர்கள் வழக்கு மன்றத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை என்று, வழக்கை விசாரிக்கும் பெல்கிரேட் நீதிபதி அறிவித்துள்ளார்.

★

## ஜப்பான்

ஜப்பான் பார்லிமெண்ட் கலைக்கப்பட்டுவிட்டதாக, தற்காலப் பிரதமராக இருக்கும் ஹாடோயாமா அறிவித்துள்ளார்.

ஜப்பான் சட்டப்படி, பார்லிமெண்ட் கலைக்கப்பட்ட 40 தினத்திற்குள் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும். தேர்தல் தேதி இன்னும் இரண்டொரு தினங்களில் அறிவிக்கப்படும் எனத் தெரிகிறது.

# அதிகமான வழக்கறிஞர்கள்

"நீங்கள் வழக்கறிஞர்களாகவும், வேறு அதைப் போன்ற பணியாற்றுபவர்களாகவுமாகலாம்; இந்தியா ஒரு சுதந்திர நாடு; யார் வேண்டுமானாலும் வழக்கறிஞராகவோ, அன்றி, தான் விரும்பும் பணி புரிபவராகவோ ஆகலாம்; ஆனால், தேசியக் கண்ணோட்டத்தின் படி, அதிகமான வழக்கறிஞர்கள் ஒரு நாட்டிலிருப்பது இலாபகரமானதல்ல; இது எனது சொந்தக் கருத்து."

—இவ்வாறு, ஆவடி மாநாட்டில் ஆதாரக் கல்வித் திட்டம் பற்றிப் பேசிய நேரு குறிப்பிட்டார்.

# காங்கிரஸ் நிர்வாகிகள்

சென்னை, ஜன. 24—

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபர் நியமித்த புதிய செயற்குழு, ஆறு பேர்களடங்கிய 'பார்லிமெண்டரி போர்டு' ஒன்றை அமைத்துள்ளதாகத் தெரிகிறது.

யூ. என். தேபர், ஜவகர்லால் நேரு, மௌலானா அபுல்கலாம் ஆசாத், பண்டிட் கோவிந்த வல்லப பந்த், மொரார்ஜி தேசாய், ஜெகஜீவன்ராம் ஆகியோர் அந்த போர்டில் இடம் பெறுகின்றனர்.

இதற்கு முன்பிருந்த 'போர்டில்' மேற்கண்டவர்களுடன், யூ. என். தேபர் அல்லாது, பல்வந்த்ராய் மேத்தா இடம் பெற்றிருந்தார்.

செயற்குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டிய 20 பேர்களுக்கு 18-பேர்களின் பெயர்களை தலைவர் தேபர் அறிவித்திருக்கிறார்.

குழுவில் நேரு, மௌலானா ஆசாத், டாக்டர் பி. சி. ராய், பண்டித பந்த், மொரார்ஜி தேசாய், ஸ்ரீ கிருஷ்ண சின்ஹா, ஜெகஜீவன் ராம், நபகுர்ஷன் சௌத்ரி, ஹபீஸ் முகம்மது இப்ராஹீம், கியானி குருமுக் சிங்முசாபிர், பல்வந்த்ராய் மேத்தா, மோகிந்திர மோகன் சௌத்ரி, ஆதித்யேந்திரா, டி. ஆர். தியோகிர்கர், எஸ். என். அகர்வால், கே. பி. மாதவன் நாயர், ஏ. வி. குட்டியம்மாளு அம்மா, கே. காமராஜ் நாடார் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

எஸ். என். அகர்வால், கே. பி. மாதவன் நாயர் ஆகிய இருவரும் பொதுச்செயலாளர்களாக இருப்பர் என்றும் தெரிகிறது.

ஒழுங்கு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக நிரந்தரக் கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறதாம்.

# பார்மோசாவை பாதுகாக்க....

ஐசன்ஹோவர் அனுமதி கோருகிறார்

"சியாங் சர்க்காரிடமிருந்து, பார்மோசா, பெஸ்கடோரஸ் போன்ற தீவுகளைப் பாதுகாத்துக் கொள்ள அவசியம் ஏற்படுகிற போது, அமெரிக்கா தனது இராணுவத்தை உபயோகித்துக் கொள்ள அதிகாரம் அளிக்க வேண்டும்" என்று அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர், அமெரிக்க சட்டசபையிடம் கோரியிருக்கிறதாகக் கூறப்படுகிறது.

இத்தீர்மானம், அமெரிக்காவின் மேல், கீழ் சட்டசபைகளின் அயல் நாட்டு விவகாரக் குழுவினரின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

இதுபற்றி அவர் சட்டசபைக்கு அனுப்பியிருந்த விசேடச் செய்தியில், "பார்மோசா சுதந்திரத்துடன் இருப்பது, கம்யூனிஸ்டல்லாத சுதந்திர உலகத்துக்கு ஜீவாதாரமானதாகும்; ஆகவே, அதைப் பாதுகாப்பதற்காக, அவசியப்படும் போது போராடவும், வேறு எவ்வித நடவடிக்கைகளிலும் நாம் இறங்கவும் தயார் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி அறிவிக்க வேண்டும். இவ்வாறு செய்வது உலக சமாதானத்துக்கு உதவும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# சிரித்தவுடன் பிரசவித்தாராம்!

சென்னையைச் சேர்ந்த 19 வயதுடைய கர்ப்பமுற்ற பெண்மணி ஒருவர், நகரிலுள்ள ஒரு தியேட்டரில், திரைப் படக் காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது, படக் காட்சியில் வந்த சிரிப்பூட்டும் காட்சிகளைக் கண்டு சிரித்த சிரிப்பில், பிரசவ வேதனை அதிகப்பட்டு, தியேட்டரின் உள்ளேயே குழந்தை பெற்றாராம்! அங்கு இருந்த மற்றும் 2 பெண்மணிகள் அவருக்கு அச்சமயத்தில் உதவி புரிந்திருக்கின்றனர்.

பின்னர், ஒரு ஆம்புலன்ஸ் காரில் அப்பெண்மணியும், அவரது குழந்தையும் எழும்பூர் பெண்கள் பிரசவ மருத்துவ விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தாயும் சேயும் நலமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

# 61வது காங்கிரஸ் மாநாடு

சென்னை, ஜன. 25—

அகில இந்தியக் காங்கிரசின் அடுத்த பேரவைக் கூட்டத்தை தங்கள் தங்கள் மாநிலத்தில் நடத்துமாறு கோரி திரு-கொச்சி, மத்திய பாரத், பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலிருந்து, காங்கிரஸ் செயற்குழுவிற்கு அழைப்பு வந்துள்ளதாகத் தெரிகிறது.

மற்றும் உத்கல், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களும் அவ்வாறே கோரியுள்ளனவாம். இது பற்றிய இறுதி முடிவு பின்னர் செய்யப்படுமாம்.

## பார்வையிட்டார்

சென்னை, ஜன. 24—

பிரதமர் நேரு, நேற்று தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சிசாலையில், இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தவர் அமைத்துள்ள காட்சிசாலைக்கு வருகை தந்து அதனைப் பார்வையிட்டாராம்.

# அங்கீகாரம் கிடைத்தது

புதுடில்லி, ஜன. 25—

சென்னை மாநில விவசாயிகளிடமிருந்து 1955-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இறுதி வரை உள்ள கடன் வசூலை ஒத்திவைப்பதற்கு வகை செய்தவரும் 1954-ம் ஆண்டு சென்னை மாநில கடன்பட்ட விவசாயிகளின் தற்காலிக நிவாரண சட்டத் திருத்த மசோதாவுக்கு, இந்திய ஜனாதிபதி இராசேந்திரர் தமது அங்கீகாரத்தை அளித்துள்ளார் என்று தெரியவருகிறது.

# எகிப்து நிராகரிப்பு

ஈராக்—துருக்கி இராணுவக் கூட்டில் சேர்ந்துகொள்ளுமாறு துருக்கி சர்க்கார் அனுப்பிய அழைப்பை எகிப்து சர்க்கார் நிராகரித்துவிட்டது. ஏற்கனவே எகிப்து பிரதமர் கர்னல் நாசர் இந்த ஈராக் - துருக்கி ஒப்பந்தத்தைக் கண்டித்துக் குறிப்பிட்டுள்ளார் என்பது நினைவிருக்கலாம்.

(முன் செய்தி 2-ம் பக்கம் 5-ம் பத்தி பார்க்க).

## ஜமீன் ஒழிப்புச் சட்டம்

சென்னை, ஜன. 24—

சென்னை மாநில ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தின் 12, 14-வது பிரிவுகளின் கீழ் உரிமை கொண்டாடும் நில உடைமையாளர்கள், அது சம்பந்தமாக உடனடியாக மனுச் செய்து கொள்ளவேண்டுமென்றும், பாத்தியதைகளையெல்லாம் முறையாகப் பரிசீலித்து விசாரிப்பதற்கு இது மிகவும் அவசியம் என்றும், சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

# கழகக் கூட்டங்கள்

★

**பரமக்குடி**

தி. மு. கழக முதலாவது ஆண்டு நிறைவு விழா

பழம்நீ திடலில்

(தி. மு. கழகம் முன்பு)

**27—1—55 இரவு 9 மணிக்கு**

தலைவர்: எம். இலக்குவனார்

பேசுவோர்:

என். வி. நடராசன்
ஆர். எஸ். பிரகாசம்
எஸ். ஜீவதாசன்
நாகலிங்கம்

★

**கீழப்பழூர்**

நடுத் தெருவில்

**27—1—55 மாலை 6 மணிக்கு**

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
ஆர். அரங்கராசன்
ம. இராசு

## சொற் பயிற்சிக் கூட்டம்

26—1—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லத்தில், தோழர் வே. கி. பார்த்தசாரதி தலைமையில் 'தமிழகத்தின் தொன்மையும்-வளமும்' என்னும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

# என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஜன. 26: மாட்டிலாம்பட்டி (தர்மபுரி)
27: பரமக்குடி
28: மாரண்டஅள்ளி
29: குளக்காட்டுப்புதூர்
30: காரைக்கால்

# காங்கிரசால் . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்று வளர்க்க வேண்டியது மிக அவசியமானதாகும்.

ஆனால், இந்த லட்சியத்தை அடைவதற்கு, நாட்டில் உள்ள பெரும் தோட்டத் தொழில்கள், சுரங்கங்கள், எஞ்சினீயரிங் நிறுவனங்கள் ஆகியவற்றையும் சர்க்காரே ஏற்று நடத்த வேண்டுவது ஆவசியமாகும்."

# அவர் நம்பிக்கை

கராச்சி, ஜன. 24—

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நிலவிவரும் கடுமையான, அடிப்படையான கருத்து வேற்றுமைகள் கொண்ட பல்வேறு துறைகளில் 'நல்லுறவு' ஏற்படுவதற்குத் தமது டெல்லி வருகை பயன் தரும் என்று தாம் நம்புவதாக பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது தெரிவித்திருக்கிறார்.

# போட்டியிடுகிறார்

தூத்துக்குடி, ஜன. 25—

சென்னை சட்ட சபைக்கு சாத்தான்குளம் தொகுதிக்கான உப தேர்தலில் எட்டு பேர் போட்டியிடுவதாகத் தெரிகிறது.

அவர்களில் இருவரைத் தவிர ஏனையோர் தங்கள் அபேட்சா பத்திரங்களை வாபஸ் பெற்றுக் கொள்வர் என்றும், தோழர் எஸ். பி. ஆதித்தன் (சுயேச்சை), ஆறுமுகனேரி செல்வராஜ் (காங்கிரஸ்) ஆகியோரிடையே நேரிடைப் போட்டியிருக்குமென்றும் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,